## ஆதவ் அர்ஜூன்! எப்பதான் திருந்துவீங்க!

# தி.மு.க. ஆட்சியிலேயே விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகை தரப்பட்டது!

## தி.மு.கழக ஐ.டி. விங் விளக்கம்!

சென்னை, ஜூன்.27-

தி.மு. கழக ஐ.டி. விங் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு :-

மேடைக்கு மேடை பொய் பேசுறது பத்தாதுன்னு, இப்போ விளையாட்டு வீராங்கனைகளையும் கூட்டிட்டு வந்து பொய் சொல்ல வைக்கிறீங்களா ஆதவ் அர்ஜுனன்? எப்பதான் பாஸ் திருந்துவீங்க?

கடந்த தி.மு.க. ஆட்சியிலேயே தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை, எலிட் ஸ்கீம் மூலமா நூற்றுக்கணக்கான வீரர்களுக்கு, அவங்க போட்டிக்கு போறதுக்கு முன்னாடியே ஊக்கத்தொகை வழங்கப்பட்டிருக்கு. சட்டமன்றத்திலேயே இதற்கான ஆதாரங்கள் இருக்கு.

இப்படி ஏற்கனவே அமலில் இருக்கும் திட்டங்களை, ஏதோ இந்த ஆட்சியில் தான் முதல்முறை நடப்பது போல ஸ்டிக்கர் ஒட்டி விளம்பரம் தேடுவது வெட்கக்கேடானது. இதற்கு இந்த DIPR வேற துணை போயிட்டு இருக்கு, மக்கள் ஒன்னும் ஏமாளிங்க இல்ல என்று தி.மு.க. ஐ.டி. விங் குறிப்பிட்டுள்ளது.

(அதற்கான ஆதார படங்களை இங்கே வெளியிட்டுள்ளோம்.






## உள்ளாட்சி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் மக்கள் ஆதரவோடு மீண்டும் வெல்வோம்!

# தி.மு.க. ஆட்சிக் கால சாதனைகளை எந்த அரசும் மறைக்க முடியாது!

## முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!



திருச்சி, ஜூன். 27-

திருச்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் திருச்சி எடமலைப்பட்டி புத்தூர் பகுதியில் மாவட்ட கழக துணை செயலாளர், மாமன்ற உறுப்பினர் முத்துச்செல்வம் ஏற்பாட்டில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான, முன்னாள் அமைச்சர் கே என் நேரு, மற்றும் திராவிடர் கழக துணை பொதுச்செயலாளர் வழக்கறிஞர் மதிவதனி ஆகியோர் கலந்து கொண்டு கலைஞர் அவர்களின் புகழையும் சாதனைகளையும் போற்றி சிறப்புரையாற்றினர்.

இந்த பொதுக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பேசுகையில்..

கடந்த ஐந்தாண்டு கால மு.க.ஸ்டாலின் ஆட்சியில் மட்டும் திருச்சி மாவட்டத்தின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காக 34,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, எண்ணற்ற பணிகள் செய்து தரப்பட்டுள்ளன. திருச்சியின் 9 தொகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தங்குதடையின்றி கிடைக்கச் செய்தது திமுக ஆட்சிக் காலத்தில் தான், மாநகராட்சிப் பகுதிகளில் பட்டா வழங்குவதில் இருந்த சிக்கல்களைத் தீர்த்து, சுமார் 40 முதல் 50 ஆண்டுகளாக வசித்து வந்த 15,000க்கும் மேற்பட்ட மக்களுக்கு அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், கடந்த தேர்தலில் மக்கள் அளித்த ஆதரவையும், சில தொகுதிகளில் ஏற்பட்ட மிகக் குறைந்த வாக்குகள் வித்தியாசத்திலான பின்னடைவுகளையும் குறிப்பிட்ட அமைச்சர், நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால் அது குறித்துப் பேச இயலாது என்றார். இருப்பினும், மக்கள் நலனுக்காகத் தொடர்ந்து உழைக்கப் போவதாகக் கூறினார். மேலும் வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் தாய்மார்களும் பொதுமக்களும் தங்களது பேராதரவை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து பொதுக்கூட்டத்தில் திராவிட கழகத் துணை பொதுச்செயலாளர் வழக்கறிஞர் மதிவதனி கலந்து கொண்டு கலைஞர் அவர்களின் புகழையும் சாதனைகளையும் எடுத்துரைத்து பேசினார். நாம் மீண்டும் எழுவோம் என்பதற்கான முதல் நிகழ்ச்சிதான் திருச்சியில் தற்போது நடந்து கொண்டிருக்கிறது. தேர்தல் வெற்றி, தோல்விகளால் பின்னடைவைச் சந்திக்கக் கூடிய இயக்கம் திராவிட இயக்கம் அல்ல. அரசியல் தேர்தல் முடிவுகளைக் கொண்டு நம்முடைய வெற்றியை கணக்கிட முடியாது. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் முன்னாள் முதலமைச்சர் ஸ்டாலினுக்கும் எதிராகப் பெண்கள் இருப்பதாக ஒரு பிம்பத்தை உருவாக்கப் பார்க்கிறார்கள். ஆனால், பகுத்தறிவுள்ள பெண்கள் எப்போதும் திராவிட இயக்கத்தின் பக்கமே நிற்கிறார்கள் என்பதைக் காட்டவே இப்பெரும் கூட்டம் கூடியுள்ளது. பெரியார் போன்ற தலைவர்கள் உழைத்ததால்தான், இன்று பெண்களுக்குப் படிப்பும், வேலை வாய்ப்பும், மேடைகளில் பேசும் உரிமையும் கிடைத்துள்ளன.

பெண்களின் உழைப்பை அங்கீகரித்து கலைஞர் மகளிர் உரிமைத் தொகையாக ரூபாய் 1000 வழங்கியவர் முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட விடியல் பயணம், காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், புதுமைப் பெண் திட்டம் மற்றும் நான் முதல்வன் போன்ற திட்டங்கள் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியுள்ளன. தற்போதைய புதிய அரசு, இத்திட்டங்களின் பெயர்களை மாற்றினாலும், இவற்றால் ஏற்பட்ட நன்மைகளையும் வளர்ச்சியையும் வரலாற்றிலிருந்து யாராலும் நீக்க முடியாது. கொரோனா பேரிடர் காலத்தில், தனது உயிரையும் பொருட்படுத்தாமல் பிபிஇ கிட் அணிந்து கொண்டு மருத்துவமனைகளுக்குச் சென்று ஆய்வு நடத்தியவர் முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின். அரசியல் களத்தில் பல்வேறு பொய்களைப் பரப்பி வாக்கு கேட்டு வந்தவர்களுக்கு, மக்கள் தற்போது தகுந்த பதிலடி கொடுத்து வருகிறார்கள். திராவிட இயக்கங்களின் கொள்கைகளும் சாதனைகளும் மக்கள் மனதில் எப்போதும் நிலைத்திருக்கும் என்று அவர் பேசினார்.

இந்த பொதுக் கூட்டத்தில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், மாவட்ட பொருளாளர் துரைராஜ், கோட்டத் தலைவர் துர்கா தேவி, மாமன்ற உறுப்பினர் கிராப்பட்டி செல்வம், பகுதிச் செயலாளர் மோகன் தாஸ் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு தொடர்புடைய இடங்களில் சோதனை:

# அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை!

## மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. கண்டன அறிக்கை!



சென்னை, ஜூன் 27-

முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு தொடர்புடைய இடங்களில் நடைபெற்ற சோதனை வெளிப்படையான அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என்று மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

முன்னாள் அமைச்சரும் சட்டமன்ற எதிர்க்கட்சி கொறடாவுமான எ.வ.வேலு அவர்களுடன் தொடர்புடைய இடங்களில் டிவிஏசி என்னும் கண்காணிப்பு மற்றும் ஊழல் ஒழிப்பு இயக்குனரகம் மேற்கொண்டுள்ள சோதனைகள், “ஊழல் ஒழிப்பு நடவடிக்கை” என்ற போர்வையில் நடைபெறும் வெளிப்படையான அரசியல் பழிவாங்கல் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

தமிழக அரசியலில் மக்கள் செல்வாக்கும், அமைப்பாற்றலும் கொண்ட தலைவர்களை அரசியல் ரீதியாக முடக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் ஒன்றிய மற்றும் மாநில ஆட்சிகள் பல்வேறு விசாரணை அமைப்புகளை ஆயுதமாக பயன்படுத்தி வருகின்றன. எதிர்க்கட்சிகளின் குரலை அடக்கவும், அரசியல் எதிரிகளை அச்சுறுத்தவும், ஜனநாயகத்தை விசாரணை அமைப்புகளின் மூலம் கட்டுப்படுத்தவும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

ஒரு ஜனநாயக நாட்டில் சட்ட அமலாக்க அமைப்புகள் நடுநிலையாக செயல்பட வேண்டும். ஆனால் இன்று ஒன்றிய அமலாக்கத் துறை (ED) வருமானவரித் துறை, மத்திய புலனாய்வு துறை (சிபிஐ), டிவிஏசி போன்ற அமைப்புகள் அரசியல் அதிகார மையங்களின் கட்டளைக்கிணங்க செயல்படுகின்றன என்ற குற்றச்சாட்டு நாடு முழுவதும் வலுப்பெற்றுள்ளது.

ஆட்சிக்கு எதிராக பேசுபவர்கள், மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றவர்கள், தேர்தல் அரசியலில் தாக்கம் செலுத்தக்கூடியவர்கள் மட்டுமே குறிவைக்கப்படுவது இதற்கே சான்றாகும்.

எதிர்க்கட்சி கொறடா எ.வ.வேலு அவர்கள் மீது தற்போது நடத்தப்படும் சோதனைகளும் அதே அரசியல் காழ்ப்புணர்ச்சியின் ஒரு பகுதியாகவே பார்க்கப்படுகின்றன. தேர்தல் அரசியலில் எதிர்கால தாக்கத்தை பலவீனப்படுத்தவும், அரசியல் மிரட்டல் சூழ்நிலையை உருவாக்கவும், “எதிர்ப்பின் விலை இதுதான்” என்ற அச்சத்தை பரப்பவும் இந்த நடவடிக்கைகள் பயன்படுத்தப்படுகின்றன.

உண்மையில் ஊழலை ஒழிக்க விருப்பமிருந்தால், ஆட்சியுடன் நெருக்கம் கொண்டவர்கள் மீதும் இதே வேகத்திலும் தீவிரத்திலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட சில அரசியல் தலைவர்கள் மீது மட்டுமே இத்தகைய அதிரடி நடவடிக்கைகள் நடைபெறுவது, இது சட்டத்தின் ஆட்சி அல்ல; அதிகாரத்தின் பழிவாங்கும் அரசியல் என்பதை வெளிப்படுத்துகிறது.

அரசியல் எதிர்ப்புகளை ஒடுக்க விசாரணை அமைப்புகளை பயன்படுத்துவது ஜனநாயகத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாகும். தமிழகம் எப்போதும் அதிகார அத்துமீறலுக்கும் அரசியல் அடக்குமுறைக்கும் எதிராக குரல் கொடுத்த மண்ணாகும். மிரட்டல்களாலும் சோதனைகளாலும் அரசியல் குரல்களை மவுனப்படுத்த முடியாது.

இந்த அரசியல் வேட்டையாடும் போக்கை மக்கள் கூர்ந்து கவனித்து வருகின்றனர். அதிகாரம் நிரந்தரமல்ல; ஆனால் ஜனநாயகத்தின் மீதான தாக்குதல்களை மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்.

இவ்வாறு எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## தஞ்சை – டெல்டா மாவட்டங்களில் சேமிப்புக் கிடங்குகளில்

# 10 லட்சம் டன் நெல் மூட்டைகள் தேக்கம்!

## த.வெ.க. அரசு அலட்சியம்: விவசாயிகள் குற்றச்சாட்டு!

மன்னார்குடி, ஜூன்.27-

டெல்டாவில் உள்ள சேமிப்பு கிடங்குகளில் 10 லட்சம் டன் நெல் மூட்டைகள் கடந்த 4 மாதமாக தேக்கமடைந்துள்ளன. தவெக அரசின் அலட்சியத்தால் இந்த நெல் மூட்டைகள் வீணாகி வருவதாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

நாகை மாவட்டத்தில் 9, திருவாரூர் மாவட்டத்தில் 7, தஞ்சை, மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்களில் தலா 4 என 28 இடங்களில் தமிழக அரசின் நெல் சேமிப்பு கிடங்குகள் உள்ளன. இந்த கிடங்குகளில் காரிப் பருவம் 202526ல் கொள்முதல் செய்யப்பட்ட குறுவை, சம்பா நெல்மணிகள் மூட்டை மூட்டையாக இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

தஞ்சை மாவட்டத்தில் 3.23 லட்சம் மெட்ரிக் டன், திருவாரூர் மாவட்டத்தில் 2.56 லட்சம் மெட்ரிக் டன், நாகை மாவட்டத்தில் 1.35 லட்சம் மெட்ரிக் டன், மயிலாடுதுறை மாவட்டத்தில் 1.80 லட்சம் மெட்ரிக் டன், புதுக்கோட்டை மாவட்டத்தில் 1 லட்சம் மெட்ரிக் டன் என மொத்தம் 9.94 லட்சம் மெட்ரிக் டன் நெல் மூட்டைகள் தேக்கமடைந்துள்ளன. இதில் குறுவை மட்டும் 1.40 லட்சம் மெட்ரிக் டன். மொத்த கொள்முதலுக்கான செலவு ரூ.2,400 கோடி. இதில் குறுவை 4 முதல் 5 மாதமாகவும், சம்பா 2 மாதமாகவும் தேங்கி கிடக்கின்றன. இந்த நெல் மணிகள் வெயிலிலும், காற்றிலும், மழையிலும் வீணாகி வருகின்றன.

எனவே தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழக அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்து நெல் மூட்டைகளை அரசு மற்றும் தனியார் ஆலைகளுக்கு அரவைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது பற்றி விவசாய சங்க தலைவர்கள் கூறியதாவது: கொள்முதல் செய்யப்பட்டதில் சம்பா நெல் மணிகள் ஓரளவு தாக்குப்பிடிக்கும். ஆனால் குறுவை இன்னும் 1 மாதமே தாக்குப்பிடிக்கும். அதற்குள் நகர்வு செய்யாவிட்டால், நெல் மணிகள் பாதிக்கப்படும்.

அப்படி ஒரு நிலை ஏற்பட்டால், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகத்துக்கு மிகப்பெரிய பொருளாதார இழப்பு ஏற்படும். அதே போல் கோடை குறுவை 1 லட்சம் டன் நெல் அறுவடைக்கு தயாராக உள்ளது. இந்த நெல்லும் கொள்முதல் செய்யப்படும் பட்சத்தில் கிடங்குகளில் நெல் மூட்டைகளை அடுக்கி வைக்க இடம் இருக்காது. இதனால் நுகர் பொருள் வாணிப கழகத்துக்கு மிகப்பெரிய நெருக்கடி ஏற்படும். தமிழகத்தில் உள்ள பல நெல் சேமிப்பு கிடங்குகளில் திறந்த வெளியில் தான் நெல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

தற்போது அடிக்கடி மழை பொழிந்து வருவதால் தார்ப்பாய் மூலம் மூடி நெல் மூட்டைகளை பாதுகாப்பது சிரமமாக உள்ளது. சில நாட்களுக்கு முன் கும்பகோணம் அடுத்த பட்டீஸ்வரம் திறந்த வெளி கிடங்கில் மழையால் நெல் மூட்டைகள் சேதமடைந்தது. இதனால் 2 பணியாளர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். அதே போல் தஞ்சை நடுவூரிலும் மழையால் நெல் மூட்டைகள் சேதமடைந்துள்ளன. மதுரை உயர்நீதிமன்ற கிளை நீதிபதி கூட, நெல் மூட்டைகள் தேக்கமடைந்திருப்பது கவலை தருகிறது என நேற்று தெரிவித்தார்.

நெல் மூட்டைகளை நகர்வு செய்யும் விவகாரத்தில் தவெக அரசு ஏன் இவ்வளவு அலட்சியமாக இருக்கிறது என தெரியவில்லை. அதிகாரிகள் நெல் மூட்டைகளை நகர்வு செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

### முறைகேடு செய்ய அதிகாரிகள் திட்டம்?

4 மாதத்துக்கு மேல் நெல் மூட்டைகளை அரவைக்கு அனுப்பாமல் தேக்கி வைத்துள்ளனர். இதன்மூலம் மிகப்பெரிய முறைகேட்டில் ஈடுபட அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாக பரபரப்பு தகவல் வெளியாகி உள்ளது. அதாவது நகர்வு செய்யப்படாமல் தேக்கி வைத்திருக்கும் பட்சத்தில் குறிப்பிட்ட காலத்துக்கு மேல் எலி தின்று விட்டது, மழையால் வீணாகி விட்டது என்று சொல்லி முறை கேட்டில் ஈடுபட வாய்ப்பு உள்ளதாம். குறிப்பாக 50,000 டன் நெல் வீணாகி விட்டால், 1 லட்சம் டன் நெல் வீணாகி விட்டதாக கணக்கு காட்டுவார்களாம்.

வீணாகாத நெல்லை தனியாருக்கு விற்று பணம் பார்த்து விடுவார்களாம். எனவே இந்த மாதிரி முறைகேட்டுக்கு வழிவகுக்காமல் நெல் மூட்டைகளை உடனே நகர்வுக்கு அனுப்ப வேண்டும் என்று தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழக பணியாளர் சங்கத்தினர் கோரிக்கை வைத்துள்ளனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலையில் கழக விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன் அவர்களின் தாயார் த.பிச்சையம்மாள் அம்மையார் அவர்களின் திருவுருவப்படத்தை முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில், முன்னாள் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன்ஆகியோர் முன்னிலையில் கழக முதன்மை செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்து மலரஞ்சலி செலுத்தினார். நிகழ்வில் க.வைரமணி, அன்னியூர் சிவா, மு.அன்பழகன், அன்பழகன், அரு. வீரமணி, மு.பி.மணி, கீரை.தமிழ்ராஜா, சு.சண்முகம், என்.சாத்தையா, கே.எஸ்.சந்திரன், தென்னலூர் எம்.பழனியப்பன், மு.க.ராமகிருஷ்ணன், அ.இளங்குமரன், மு.பி.ம.சத்தியசீலன், கே.பி.அய்யப்பன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, எம்.கோவிந்தராஜ், ஓ.எஸ். வெங்கடாச்சலம், வை. விஜயக்குமார், எம்.எஸ்.ஏ.ரியாஸ் முகம்மது உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.




தென்காசி தெற்கு மாவட்டம் சுந்தரபாண்டிபுரம் மிஸ்பா மழலையர் பள்ளியில் ஒன்று முதல் ஐந்து வரை படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு நோட் புத்தகம் வழங்கும் நிகழ்வு பள்ளி நிர்வாகி சிமியோன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் பங்கேற்று வழங்கினார். நிகழ்வில் மாவட்ட பிரதிநிதிகள் ஸ்டீபன் சத்யராஜ், அன்பழகன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஹரி கிருஷ்ணன், அசோக் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் அல்லி டெய்சிபாய், சுப்புலட்சுமி, மதுபாலா, இசக்கியம்மாள், அன்னாள் சாந்தி உள்பட ஆசிரியப் பெருமக்களும் கலந்து கொண்டனர்.